செய்தி வெளியீட்டு எண்: 496

## செய்தி வெளியீடு – 19.08.2009

சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் துறை அமைச்சகம் கடலோர சுற்றுச்சூழல்களைப் பாதுகாக்கும் நோக்குடன், 1991ஆம் ஆண்டில் வெளியிட்ட கடலோரப் பகுதிகளை முறைப்படுத்தும் அறிவிக்கையில் கடந்த பதினேழு ஆண்டுகளில் பல்வேறு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

இச்சூழ்நிலையில், கடலோரப் பகுதிகளை நிர்வகித்தல் தொடர்பாக எழும் பிரச்சினைகளை ஆய்வு செய்வதற்காக பேராசிரியர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் தலைமையில் 2004 ஜுன் திங்களில் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு 2005ல் தனது அறிக்கையை மத்திய அரசுக்கு அளித்தது. அதன் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்காக மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள்துறை அமைச்சகம் நடவடிக்கைகள் மேற்கொண்டு, 2008ஆம் ஆண்டு மே மாதத்தில் கடலோர நிர்வாக மண்டல வரைவு அறிவிக்கையை வெளியிட்டு பொதுமக்களின் ஆலோசனைகளையும் ஆட்சேபனைகளையும் அறுபது நாட்களுக்குள் தெரிவிக்குமாறு கோரியது.

அதனையொட்டி, முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கு 27.9.2008 அன்று எழுதிய கடிதத்தில், இந்த அறிவிக்கை, கடலோரப் பகுதிகளில் வாழும் மக்கள் குறிப்பாக, மீனவர்கள், தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுமென்றும், தங்களுக்கு மிகுந்த சிரமங்கள் ஏற்படக்கூடும் என்றும் அஞ்சுகின்றனர். எனவே, இந்த அறிவிக்கையை அவர்கள் புரிந்துகொள்ளும் வகையில், அறிக்கை முழுவதையும் தமிழில் வெளியிட வேண்டும் என்றும், அவ்வாறு வெளியிடுவது அதனை முழுவதும் அவர்கள் புரிந்துகொள்வதற்குப் பயன்படும் என்பதுடன், அந்த அறிக்கையின் மீது தங்களுடைய எண்ணங்களை அவர்கள் தெளிவாக வெளிப்படுத்தவும் இயலும் என்றும், கடலோரங்களில் வாழும் மக்கள் குறிப்பாக மீனவர்கள் இந்த அறிக்கையை முழுவதும் ஏற்றுக்கொள்ளும்வரை இதன் மீதான நடவடிக்கையைத் தள்ளி வைக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகளை ஏற்று 2008ல் வெளியிடப்பட்ட கடலோர மண்டல நிர்வாகம் தொடர்பான அறிவிக்கையைக் கைவிடுவது என்றும், தற்போது நடைமுறையில் உள்ள 1991ஆம் ஆண்டின் கடலோர முறைப்படுத்தும் மண்டல அறிவிக்கையை வலுப்படுத்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதென்றும் முடிவுசெய்துள்ளதாக 8.8.2009 அன்று, முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் துறை அமைச்சர் திரு.ஜெய்ராம் ரமேஷ் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரிய காலத்தில் மேற்கொண்ட நடவடிக்கையினால் தமிழகத்தின் கடலோரங்களில் வாழும் மீனவ சமுதாய மக்களுக்கு ஏற்பட்டிருந்த அச்சம் முற்றிலும் நீக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

* * *

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
கலைமைச் செயலகம், சென்னை-9